சுருக்கம்

உயர்நிலைக் குழு பரிந்துரை – அசாதாரணச் செலவினங்களை மேற்கொள்ள அளிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வின் நிதி வரம்பை உயர்த்துதல் – பரிந்துரையை ஏற்று ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3)துறை

அரசாணை (ப) எண். 165 நாள் : 11.04.2008

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.1, ந.நி.ம.கு.வ துறை, நாள் 04.01.1993
2. உயர்நிலைக்குழு அறிக்கை 2007 பரிந்துரை எண். 35

------

<u>ஆணை :</u>

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் அட்டவணை 4 விதி 53(6)ன்படி அசாதாரண செலவினங்களை மேற்கொள்ள அரசின் அனுமதி பெற வேண்டும்.

2) முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அசாதாரண செலவினங்களை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு நிதி வரம்பினை நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அ) மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் ரூ.500/– வரையிலும்,
ஆ) நகராட்சி நிர்வாக ஆணையர்
சிறப்பு மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளுக்கு ரூ.5000/– வரையிலும்,
இதர நிலை நகராட்சிகளுக்கு ரூ.2000/– வரையிலும்

3) இந்த நிதி வரம்புகள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலும் தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் குறைந்த தொகையாக உள்ளதாலும் பின்வருமாறு இதனை உயர்த்த உயர்நிலைக் குழு பரிந்துரைத்துள்ளது.

த.பி.பா.

| வ. எண் | | தற்போதைய நிலை | உயர்நிலைக்குழு பரிந்துரை செய்துள்ள நிதி வரம்பு |
|---|---|---|---|
| 1. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் – அனைத்து நிலை நகராட்சிகளுக்கும் | (தற்போது ரூ.500/-) | ரூ.5000/– வரை |
| 2. | நகராட்சி நிர்வாக ஆணையர் – அனைத்து நிலை நகராட்சிகளுக்கும் | (தற்போது ரூ.5000/- வரை சிறப்பு மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளுக்கும், ரூ.2000/- வரை பிற நகராட்சிகளுக்கும்) | ரூ.15000/– வரை |
| 3. | பேரூராட்சிகள் இயக்குநர் – அனைத்து நிலை பேரூராட்சிகளுக்கும் | (தற்போது ஏதுமில்லை ) | ரூ.10000/– வரை |

4) எனவே, மேற்குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை அரசு கவனமுடன் ஆராய்ந்து, அதனை ஏற்று, அசாதாரண செலவினங்களை மேற்கொள்ள மேலே பத்தி-3.ல் குறிப்பிட்டவாறு நிதி வரம்பை நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

5) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 13972/நநிமகுவ/08 -1 நாள் 05.04.2008–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை 106.
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை –108.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து செயல் அலுவலர்கள் (பேரூராட்சி ஆணையர் வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை –108

நகல்
நிதித்துறை, சென்னை –9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி.2/பொது தேர்தல்கள் /பேரூ.2)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.